**இரணைமடு நீர்ப்பாசன அபிவிருத்திச் செயற்திட்டம் – 2017**

இரணைமடு நீர்ப்பாசன அபிவிருத்திச் செயற்திட்டத்தின் 2017 செப்தெம்பர் 30 இல் முடிவடைந்த 09 மாத காலப்பகுதிக்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்திற்கும் (ஐஎவ்ஏடி) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2012 சனவரி 30 ஆம் திகதிய 1-857-எல்கே ஆம் இலக்க நிதியளிப்பு உடன்படிக்கையின் IX ஆம் உறுப்புரை, 9.03 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

செயற்திட்டத்தின் நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வட மாகாணத்தின் மாகாண நீர்ப்பாசனத் திணைக்களமும் விவசாயத் திணைக்களமும் செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவர்களாக உள்ளன. நீர் மற்றும் காணிகளது உற்பத்தித்திறனின் நிலைத்திருக்கக்கூடிய முன்னேற்றத்தை அடைந்துகொள்வதற்கு இயலக்கூடியவாறு நீர்ப்பாசன உட்கட்டமைப்பின் ஆக்கபூர்வமானதும் நிலைத்திருக்கக்கூடியதுமான முகாமைத்துவத்தை மேம்படுத்துதல் செயற்திட்டத்தின் நோக்கங்களாகும். நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 3,782.43 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 29.32 மில்லியனானதுடன் அதில் ரூபா 2,819.77 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 22.23 மில்லியன் விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்தால் வழங்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. இதற்கு மேலதிகமாக, ரூபா 160 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 1.23 மில்லியன் பங்களிப்பு தனியார் துறை நிறுவனங்களிடமிருந்தும் ரூபா 351 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 2.70 மில்லியன் பங்களிப்பு செயற்திட்டத்தின் பயனாளிகளிடமிருந்தும் பெற்றுக்கொள்ளப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. செயற்திட்டமானது அதனது நடவடிக்கைகளை 2012 சனவரி 30 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2017 மார்ச் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது. எவ்வாறாயினும் 2017 செப்தெம்பர் 30 வரையான 09 மாத காலப்பகுதிக்காக செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். செயற்திட்டக் கணக்காய்வுகளிற்காக இலங்கை கணக்காய்வு நியமங்கள் மற்றும் விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதிய வழிகாட்டல்கள் என்பவற்றிற்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின்

தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணுதல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் மற்றும் அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2017 செப்தெம்பர் 30 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்ததா என்பதும்,

(உ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் நிதியளித்தல் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(ஊ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்

(ஏ) நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஒ) நிதியளித்தல் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும்,

(அ) செயற்திட்டமானது 2017 செப்தெம்பர் 30 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்கள் மற்றும் ஐஎவ்ஏடி வழிகாட்டல்கள் என்பவற்றிற்கு இணங்க 2017 செப்தெம்பர் 30 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் மற்றும் அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தன என்பதுடன் 2017 செப்தெம்பர் 30 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தது என்றும்,

(ஈ) நிதியளித்தல் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கு இணங்க மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடிந்திருந்தது என்றும்,

(உ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(ஊ) நிதியளிப்பு உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் 2017 செப்தெம்பர் 30 வரையான நிதிகளின் பயன்பாடு தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| மூலம் | நிதியளித்தல் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டு காலப்பகுதிக்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | | பயன்படுத்திய நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | மீளாய்வுக் காலப்பகுதியின் போது | | 2017 செப்தெம்பர் 30 இல் உள்ளவாறு | |
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஐஎவ்ஏடி | 22.23 | 2,819.77 | 5.96 | 892 | 3.70 | 560.44 | 20.46 | 2,883.03 |
| தனியார் துறை அமைப்புக்கள் | 1.23 | 160.00 | - | - | - | - | 0.01 | 0.58 |
| பயனாளிகள் பங்களிப்பு | 2.70 | 351.00 | - | - | 0.03 | 3.78 | 0.19 | 25.18 |
| இலங்கை அரசாங்கம் | 3.16 | 451.43 | 1.24 | 185 | 1.18 | 117.14 | 3.01 | 366.57 |
| **மொத்தம்** | **29.32** | **3,782.20** | **7.20** | **1,077** | **4.91** | **681.36** | **23.67** | **3,275.76** |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 செப்தெம்பர் 30 இல் உள்ளவாறு செயற்திட்ட நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 2,819.77 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 22.23 மில்லியன் மொத்த ஒதுக்கீட்டில் ரூபா 2,883.43 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 20.46 மில்லியன் செயற்திட்டக் காலப்பகுதியின் இறுதியில் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) ரூபா 160 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 1.23 மில்லியன் தொகையான தனியார் துறை நிறுவனங்களின் எதிர்பார்க்கப்பட்ட பங்களிப்பு மற்றும் ரூபா 351 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 2.70 மில்லியன் தொகையான செயற்திட்ட பயனாளிகளின் எதிர்பார்க்கப்பட்ட பங்களிப்பு என்பவற்றில் செயற்திட்டக் காலப்பகுதியின் இறுதியில் முறையே ரூபா 0.58 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 0.01 மில்லியன் மற்றும் ரூபா 25.18 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 0.19 மில்லியன் தொகையான பங்களிப்புக்கள் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தன.

## 3.2 பௌதீக முன்னேற்றம்

செயற்திட்ட பூர்த்தியாக்கல் அறிக்கையின் பிரகாரம் இரணைமடுப் பிரதேசத்திலுள்ள நீர் மற்றும் காணியின் நிலைபேறான முன்னேற்றத்தை அடைந்துகொள்வதற்காக அவற்றின் மீதான விவசாய உற்பத்திப் பொருட்கள், விரிவாக்கம் மற்றும் சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளை முன்னேற்றுவதற்கான நீர்ப்பாசன உட்கட்டமைப்பு அபிவிருத்தி செயற்திட்டத்தின் பிரதான கூறுகள் 2017 செப்தெம்பர் 30 இல் உள்ளவாறு பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் யாழ்ப்பாணம் - கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் சுகாதார செயற்திட்டம் என அழைக்கப்பட்ட ஏனைய நன்கொடை நிதியளிக்கப்பட்ட செயற்திட்டத்தின் கீழ் இரணைமடுக் குளத்தின் இயலளவை வலுப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய வேலைகள் 2017 திசெம்பர் 31 வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக செயற்திட்டத்தால் பூர்த்தி செய்யப்பட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி வேலைகள் பிரதேசத்திலுள்ள மக்களின் நலனிற்காக முழுமையான வலுப்படுத்தல் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பில் பின்வரும் மேலதிக அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்ட முன்னேற்ற அறிக்கைகளின் பிரகாரம் 30 கிலோமீற்றர்கள் நீளமான நீர்ப்பாசன முறைமையின் அனைத்துப் பிரதான கால்வாய்களினதும் புனரமைப்பு வேலைகள் செயற்திட்டக் காலப்பகுதியின் இறுதியில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், 135 கிலோமீற்றர்கள் கிளை/ விநியோகக் கால்வாய்கள் மற்றும் 123 கிலோமீற்றர்கள் வயல் கால்வாய்கள் புனரமைப்புச் செய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் நிதி ஒதுக்கீடுகள் போதாமையின் காரணமாக செயற்திட்டக் காலப்பகுதியின் இறுதியில் 113 கிலோமீற்றர்கள் கிளை/ விநியோகக் கால்வாய்கள் மற்றும் 22 கிலோமீற்றர்கள் வயல் கால்வாய்களின் புனரமைப்பு வேலைகள் மாத்திரமே பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. மேலும், நிலைத்திருக்கக்கூடிய வகையில் அத்தகைய நீர்ப்பாசன கால்வாய்களை பராமரிப்பதற்கு முறையான பொறிமுறையொன்று காணப்படாததன் காரணமாக பரந்தன் பிரதேச கால்வாய்களில் மண் மற்றும் ஏனைய சேகரிக்கப்பட்ட குப்பைகள் நிரப்பப்பட்டிருந்தமையை 2018 பெப்ரவரி 23 இல் கணக்காய்வாளர்களால் மேற்கொள்ளப்பட்ட பௌதீக அவதானிப்புக்கள் வெளிப்படுத்தியிருந்தன

.

(ஆ) ஆரம்ப அமுல்ப்படுத்தல் திட்டத்தின் பிரகாரம் செயற்திட்டத்தின் உட்கட்டமைப்பு அபிவிருத்தி நோக்கங்களிற்கான கூறின் கீழ் 427 சிறியளவிலான அரிசி செயன்முறைப்படுத்தும் நிலையங்களை நிர்மாணிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டக் காலப்பகுதியின் இறுதியில் விவசாயிகள் அமைப்புக்களின் பயன்பாட்டிற்காக 03 பாரியளவிலான நெல் களஞ்சியங்கள் மற்றும் 19 உலர்த்தும் தளங்கள் மாத்திரமே நிர்மாணிக்கப்பட்டிருந்தன.

(இ) மேலும் பரந்தன், ராமநாதபுரம், மற்றும் பன்னங்கண்டியில் ரூபா 36 மில்லியன் கிரயத்தில் நிர்மாணிக்கப்பட்ட பாரியளவிலான நெல் களஞ்சியங்கள் பிரதேசங்களிலுள்ள விவசாயிகளின் பயன்பாட்டிற்காக 2016 ஆகஸ்ட் 23 இல் உத்தியோகபூர்வமாக திறக்கப்பட்டிருந்த போதிலும் 2018 பெப்ரவரி 23 வரையிலும் பனங்கண்டியிலுள்ள களஞ்சியத்தின் ஒரு பகுதி மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது. 2018 பெப்ரவரி 23 இல் மேற்கொள்ளப்பட்ட களப் பரீட்சிப்பு பரந்தனில் நிர்மாணிக்கப்பட்ட களஞ்சியக் கட்டிடத்தில் சில பிரதான குறைபாடுகள் காணப்பட்டதை வெளிப்படுத்தியிருந்தன. மேலும் உரிய கட்டிடம் நெல் களஞ்சியப்படுத்தும் நோக்கங்களிற்காக முறையாக பேணப்பட்டிருக்காதமை வெளிப்படுத்தப்பட்டிருந்தன.

(ஈ) செயற்திட்ட மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம், செயற்திட்டப் பிரதேசத்திலுள்ள 150 கிலோமீற்றர்கள் நீளமான கிரவல் வீதிகள் செயற்திட்டத்தால் புனரமைக்கப்படுவதற்கு பட்டியலிடப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், செயற்திட்டக் காலப்பகுதியின் இறுதியில் 20 கிலோமீற்றர்கள் நீளமான கிரவல் வீதிகள் மாத்திரமே புனரமைக்கப்பட்டிருந்ததென வெளிப்படுத்தப்பட்டிருந்தது. மேலும், 25 கிலோமீற்றர்கள் நீளமான ஏனைய பண்ணை வீதிகள் கொங்கிறீட் வீதிகளாக மீள நிர்மாணிக்கப்பட்டிருந்தன.

(உ) உற்பத்தி விரிவுபடுத்தல் மற்றும் சந்தைப்படுத்தல் கூறின் கீழ் ரூபா 345.8 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 2.47 மில்லியன் ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 275.6 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 1.96 மில்லியன் மாத்திரமே செயற்திட்ட காலப்பகுதியின் இறுதியில் பயன்படுத்தப்பட்டிருந்தது. அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் விவசாயத் திணைக்களத்தால் செயற்திட்டக் காலப்பகுதியின் போது நடாத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட 3,043 நெல் அல்லாத பயிர் தொகுதிகளை உருவாக்குதல், பயிர் பன்முகப்படுத்தல் செய்முறை விளக்கங்கள் மற்றும் பண்ணை செய்முறை விளக்கங்கள் போன்ற பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் 2017 செப்தெம்பர் 30 இல் உள்ளவாறு அத்தகைய நிகழ்ச்சித்திட்டங்கள் எதுவும் நடாத்தப்பட்டிருக்கவில்லை என்பது வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

**3.3 சர்ச்சைத் தன்மையான விடயங்கள்**

------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 செப்தெம்பர் 30 இல் செயற்திட்ட நடவடிக்கைகள் முடிவுறுத்தப்படுவதை கருத்திற்கொள்ளாமல் 2017 பெப்ரவரி 15 இல் ரூபா 16 மில்லியன் கிரயத்தில் 02 மோட்டார் வாகனங்களை கொள்வனவு செய்வதற்கு செயற்திட்டம் நடவடிக்கை எடுத்திருந்ததுடன் அத்தகைய சொத்துக்கள் அமுல்படுத்தல் முகவரிற்கு மாற்றப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், குமரபுரத்திலுள்ள வயல்களில் பயிரிடப்பட்ட நெற்களை அபிவிருத்தி செய்வதற்காக திட்டமொன்றை தயாரிப்பதற்கு செயற்திட்டத்தால் ரூபா 4.20 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் உரிய திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு பிரதேசத்திலுள்ள நெல் வயல்களை அபிவிருத்தி செய்வதற்கு செயற்திட்டத்தின் அமுல்படுத்தல் முகவர்களால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாக கணக்காய்விற்காக தகவல்கள் எதுவும் பெறப்பட்டிருக்கவில்லை.

**3.4 செயற்திட்ட நடவடிக்கைகளை முடிவுறுத்துதல்**

------------------------------------------------------------------------------

செயற்திட்ட நடவடிக்கைகள் 2017 மார்ச் 31 இல் உள்ளவாறு முடிவுறுத்தப்பட்டிருந்ததுடன் 2017 செப்தெம்பர் 30 அளவில் அனைத்து உரித்துள்ள செலவினங்களும் கோரப்பட்டு மீளப்பெறப்பட்டிருந்தன. மேலும், செயற்திட்டப் பூர்த்தியாக்கல் அறிக்கை 2017 செப்தெம்பர் 20 இல் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ரூபா 29 மில்லியன் பெறுமதியான சொத்துக்களை உரிய தரப்பினரிற்கு கையளித்து கணக்குகளை முடிவுறுத்துவதற்காக நிறைவேற்றல் முகவரால் செயற்திட்ட முகாமைத்துவப் பிரிவிற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை.